மதுரை வட்ட யாதவர்களின்
குலச்சடங்குகள்
(ஆய்வேடு)

பேராசிரியர் கா.இராமானுசம்
யாதவர் கல்லூரி,மதுரை

ஆய்வு ஆண்டு: 1981

ஆயிரம் வீட்டு இடையர்:-

ஆயிரம் வீட்டு இடையர்களைப் பற்றிய செய்திகளைப் பெரும்பாலும் வாய்மொழி வழியாகவே தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. மதுரை வடக்குமாசியில் இருக்கும் திருமால் சோலைமலை, அச்சம்பட்டியில் இருக்கும் மாடசாமி, ஊமைச்சிகுளம் மாறநாட்டுக்கோனார் போன்ற சான்றோர் வாய்வழிக் கிடைத்த தரவுகள் இங்குத் தரப்படுகின்றன.

"300 ஆண்டுகளுக்கு முன் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஊர்களில் புறநாட்டு இடையர் என்னும் பிரிவினர் வாழ்ந்து வந்தனர். அவர்கள் மாயசாஸ்திரத்தில் வல்லவர்களாய் விளங்கினர். அவர்கள் மந்தை வெளியில் இரவு நேரங்களில் படுத்து உறங்கும்போது கோள்நிலைகள் மாறுவதைக் கண்டறிந்தனர். ஒரு சமயம், மந்தையைக் காக்கிற பெரியவர் ஒருவர் கோள்களின் மாற்றத்தைக் கண்டு அதனைத் தீச்சகுனமாய்க் கருதினார். அக்காலத்தில் திருநெல்வேலி பாளையக்காரர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. அங்கு வாழ்ந்த இடையர்கள் ஒருவனுக்கு ஒருத்தி என்னும் கொள்கையினர். இப்பிரிவினருள் ஒரு பெண் தன் கணவனை இழந்துவிட்டால் மறுமணம் செய்து கொள்ளும் வழக்கம் இல்லை. இந்நிலையில் அங்குள்ள பாளையக்காரர் இடையர்களை அழைத்துக் கணவனை இழந்த பெண்கள் வாழ்க்கை முழுவதும் விதவையாய் இருப்பது நல்லதில்லை. அவர்கள் மற்றவர்களைப் போல மறுமணம் செய்து கொள்ளலாம் என்று வற்புறுத்தினர். 'நாங்கள் அதற்கால் கட்டமாட்டோம்' என்று சொல்லிப் பாளையக்காரர் அறிவுரையினை இடையர்கள் ஏற்க மறுத்தனர்.

அங்கு வாழ்ந்த இடையர்கள் பாளையக்காரருக்குச் சொந்தமான நிலங்களில் வேளாண்மைத்தொழில் செய்து வந்தனர். நெல்மணிகள்

நன்கு விளைந்திருந்தன. அவ்வாண்டு வழக்கம் போல இடையர்கள் நெற்பயிர்களை அறுவடை செய்தனர். அறுவடை முடிந்ததும் இடையர்கள் நெற்பயிர்களைக் கட்டத்தொடங்கினர். அப்பொழுது பாளையக்காரர் 'அந்த பயிர்களை இடையர்கள் கட்டக்கூடாது!' என்று ஆணை பிறப்பித்துவிட்டார். காரணம் கேட்ட இடையர்க்கு "நீங்கள் தான் அறுத்தால் கட்டமாட்டோம் என்று சொன்னீர்களே! அதன்படியே நீங்கள் இப்பொழுது நெற்பயிர்களைக் கட்டவேண்டாம்" என்று பாளையக்காரர் விளக்கம் கூறினார். இடையர்கள் நெற்கதிர்களை அப்படியே போட்டு வீட்டுத் திரும்பி விட்டனர். அவர்களுக்குக் குல ஒழுக்கமே பெரியதாகத் தோன்றியது. பாளையத்தை விட்டுச் செல்ல முனைந்தனர். அதன்படி எல்லாருக்கும் செய்தி அனுப்பப்பட்டது. எல்லா இடையர்களும் ஓரிடத்தில் கூடி முடிவெடுத்தனர். அம்முடிவின்படி ஒரு நாள் இரவோடு இரவாகக் கால்நடைகளை ஓட்டிக்கொண்டு வடக்கு நோக்கி வந்தனர். வரும் வழியில் திருமங்கலத்தில் தங்கினர். திருமலை நாயக்கரிடம் பணியாற்றி வந்த பின்னைத்தேவர் என்பவர் இவர்களைச் சந்தித்து விவரம் கேட்டறிந்தார். நடந்தவற்றையெல்லாம் அறிந்த பின்னைத்தேவர் திருமலை மன்னரிடம் அவர்களுடைய நிலையை எடுத்துரைத்தார். மன்னர் அவர்களை அழைத்து வந்து மதுரையில் தங்குதற்கு ஏற்பாடு செய்யும்படி ஆணையிட்டார். பின்னைத்தேவர் அவர்களை அழைத்து வந்து மீனாட்சி அம்மன் கோவிலின் வடக்குப் பகுதியில் தங்க வைத்தார். அவர்கள் குடியேறும் போது அப்பகுதியிலிருந்த கடம்பமரங்களை வெட்டிச் செம்மைப்படுத்தி அங்குத் தம் வாழ்விடங்களை அமைத்துக் கொண்டனர். இடையர்களுடைய வாழ்விடத்தை அடுத்துக் கோட்டையும், அகழியும் இருந்தன என்றும் பிற்காலத்தில் 'மாரெட்டு' என்ற ஆங்கில அதிகாரி அக்கோட்டையை இடிக்கவும் அகழியை மூடவும் ஆணையிட்டான் என்றும் கோட்டையை இடிக்கின்ற பொறுப்புப் பெருமாள் மேஸ்திரி என்பவருக்குக் கொடுக்கப்பட்டது என்றும் தெரிய

வருகிறது. அதனால் தான் அப்பகுதியிலுள்ள வீதிகளில் ஒன்று மாரெட்டு வீதி என்றும் மற்றொன்று பெருமாள் மேஸ்திரி வீதி என்றும் இன்றும் அழைக்கப்படுகின்றன.

மதுரையைச் சுற்றியுள்ள 18 பட்டிகளில் இடையர்கள் ஆடு மாடுகளை மேய்ப்பதற்கும் குடியிருப்பதற்கும் திருமலை மன்னர் நிலம் ஒதுக்கித் தந்தார் என்பதும் அவர்கள் கூறிய செய்தியாகும்.

திருமங்கலம் தருமத்துப்பட்டிக்கிராமத்தில் பிச்சைத்தேவரின் வம்ச வழியினரான தவமணித்தேவரை நான் ஆய்வின்போது சந்திக்க நேர்ந்தது. வாய்வழியாக வழங்கி வரும் செய்திகள் உண்மை என்று கூறி, அவற்றிற்கு ஆதாரமான செப்புப்பட்டயம் ஒன்றினை அவர் காட்டினார். அப்பட்டயச் செய்திகள் இந்நூல் பின்னிணைப்புப் பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளன. தவமணி கள்ளந் தேவரிடம் இருக்கின்ற 'பூவேந்தர் குலத்தேவர் சமூக வரலாறு' என்ற நூலில் 'மதுரை நகர் ஆயிரம் வீட்டிடையர்களின் காப்பாளன் திருமலை பிச்சைத்தேவன்' என்ற குறிப்பும் அதனோடு மேற்சொன்ன செய்திகள் சிலவும் காணப்படுகின்றன. திருநெல்வேலி வட்டத்தில் புதநாட்டில் வாழ்ந்த இடையர்களுக்கு அங்கிருந்த பாளையக்காரன் எல்லையில்லாத தொல்லைகளைக் கொடுத்தான். ஆகவே அந்நாட்டு இடையர்கள் ஒன்று கூடி மதுரைக்கு ஓடி வந்து திருமலை மன்னரிடம் அடைக்கலம் புகுந்தனர். மன்னர் திருமலை பிச்சைத்தேவரை அவ்விடையர்களுக்கு அதிபதியாக அமர்த்தினார். திருமலை பிச்சைத்தேவரும் அவர்களை முறையாகப் பாதுகாத்து வந்தார். அவர் காலமாகி விட்ட பின்னர் அவருடைய சிம்மாசனத்திற்கு வாரிசாக வரும் பட்டக்காரருக்கு முடிசூட்ட வேண்டிய பொறுப்பு மதுரை இடையர்களுக்குரியதாயிற்று.

எடுத்துக்காட்டான பட்டயச் செய்திகளையும் நூல் செய்தியையும் கொண்டு, இன்று மதுரையில் வாழுகின்ற ஆயிரம் வீட்டு இடையர்களின்

ஆகவேயிவர் திருநெல்வேலி சீமைப்பகுதியிலிருந்தும் வந்தேறியவர்கள் எனக்கொள்ளலாம்.

மதுரை வடக்குமாசி வீதியில் குடியிருக்கும் சாஸ்ரோசிய வயது முதிர்ந்த முருகக்கோனார் மேலே குறிப்பிட்ட பட்டயச்செய்திகள் அனைத்தும் உண்மை என்று உறுதிப்படுத்தினார். 18 பட்டிகளில் இடையர்கள் குடியேறியதும் அப்பட்டிகளுக்குத் தலைவர்கள் நியமிக்கப்பட்டதையும் ஆதாரத்துடன் காட்டினார். அந்த 18 பட்டித் தலைவர்களின் பெயர் பட்டியலையும் கொடுத்தார். அவை பின்வருமாறு:

1. பெரிய மாடக்கோனார்
2. பெருமாள் கோனார்
3. சுப்பிரமணியக் கோனார்
4. சுப்பாயண்டிக்கோனார்
5. பழனிச்சாமிக் கோனார்
6. இராகவக் கோனார்
7. சிங்காரவேலுக் கோனார்
8. திருவேங்கடக்கோனார்
9. முருகக் கோனார்
10. இராமசாமிக்கோனார்
11. நாராயணக்கோனார்
12. இராமுக்கோனார்
13, உலகக்கோனார்
14. சேச நாராயணக்கோனார்
15. கருப்பணக்கோனார்

16. பிச்சைக்காரர்

17. ரங்கசாமிக்காரர்

18. காலிங்கக்காரர்

இப்பதினெட்டுப் பட்டிகளிலும் வாழும் இடையர்கள் தங்களுக்குள் மட்டுமே திருமணம் செய்து கொள்ளுகின்றனர். ஒருசிலர் மட்டுமே மற்ற பிரிவினரோடு திருமணம் செய்து கொள்ளுகின்றனர் என்ற உண்மைகள் ஆய்வின் மூலம் தெரிய வந்தன.

வந்தேறிய இடையர்களுக்குத் திருமலை மன்னன் நாக்குமால் குடியேற இடம் ஒதுக்கிக் கொடுத்தான் என்று கூறுகின்றார்கள். வடக்குமாசி வீதியக்காரர் இச்செய்தியினை உறுதிப்படுத்துகின்றார். என ஆய்வின்பொழுது நாலு மாவடிகளுக்குரிய எல்லைக் கற்களைக் காண நேர்ந்தது. வடக்கு எல்லையைக் குறிக்கும் கல்லொன்று செல்லத்தம்மன் கோவில் அருகில் உள்ளது. வடக்கு எல்லையைக் குறிக்கின்ற கல் வடக்கு ஆவணி மூல வீதியில் உள்ளது. கிழக்கு எல்லையைக் குறிக்க [illegible] பிள்ளை சந்தில் ஒரு கல் காணப்படுகிறது. மேற்கு எல்லையைக் குறிக்கக் காவல்பிள்ளைக்காரச் சந்தில் நடப்பட்டிருந்த கல் காணப்பெறவில்லை. மற்ற மூன்று கற்களையும் எல்லைத் தெய்வங்களாகக் கருதி இன்றும் ஆயர்கள் வணங்கி வருகின்றனர்.

இவற்றைத் தவிர வடக்கு ஆவணிமூல வீதியின் மேற்குப் பகுதியில் இருக்கும் கல்லொன்றில் பாளம் விடப்பட்ட நாக்குமால் பற்றிய குறிப்புப் பொறிக்கப்பட்டுள்ளது. அக்கல்வெட்டினைத் தொல்பொருள் ஆய்வுத்துறையினைச் சார்ந்த திருவேங்கடத்தின் உதவியுடன் படி எடுத்துப் படித்துப் பார்த்த போது காணப்படுகிறவாறு விட்டுக்கொடுத்த ஒரு தோப்பின் கிழக்கு எல்லைக் குறிக்குமிடத்தில், 'இடையர்களுக்கு மேற்கே' என்று இருக்கிறது.

எனவே அந்தத்தோப்பிற்குக் கிழக்கே இருந்த இடம் இடையர் வாழ்ந்த பகுதியாகும் என்றும் உண்மை விளங்கியது. அந்தோப்பு இன்றுள்ள வடக்கு மாசி வீதியின் மேற்கே அமைந்திருக்க வேண்டும். இன்றுள்ள வடக்குமாசி வீதி அக்காலத்தில் இடையர் வீதி என்ற பெயரில் அழைக்கப்பட்டிருக்க வேண்டும்.

இன்று வடக்குமாசி வீதியில் வாழுகின்ற இடையர்களுக்குக் குலதெய்வங்கள் நெல்லை மாவட்டத்தில் இருக்கின்றன. ஆண்டுக்கொருமுறை நெல்லைக்குச் சென்று தங்கள் குலதெய்வங்களை வணங்குவதோடு சிலர் பிடிமண் கொண்டு வந்து மதுரையில் வைத்து வணங்குவதாக வடக்குமாசியைச் சேர்ந்த முருகக்கோனார் கூறுகின்றார். திருநெல்வேலி வட்டத்தில் உள்ள கயத்தாறு, ரெட்டியார்பட்டி, மூலைக்கரைப்பட்டி, மேகலிங்கபுரம், ஓலைப்பாட்டம் போன்ற ஊர்களில் ஆயிரம் வீட்டு இடையர்க்குக் குல தெய்வங்கள் இருக்கின்றன எனச் சந்தானகிருஷ்ணன், கந்தக்கோனார், மதுரை வீரக்கோனார், சின்னம்மா அமிர்தம் ஆகியோர் கூறுகின்றார்கள்.

மதுரை ஆயிரம் வீட்டு யாதவர்களில் கணவனை இழந்த பெண்கள் வெள்ளைச்சேலை மட்டுமே கட்டுகின்றனர். நெல்லை மாவட்டத்-தின் புறநாட்டு இடைச்சியரும் கணவனை இழந்த பின்பு வெள்ளைப் புடவைதான் கட்டுகின்றார்கள். புறநாட்டு இடையரும், ஆயிரம் வீட்டு இடையரும் அப்பரை வைத்துத்தான் திருமணம் செய்கின்றார்கள். எனவே பழக்க வழக்கங்களை மனத்தில் கொண்டு ஆராயுமிடத்துப் புறநாட்டு இடையர்களே மதுரையில் வந்து குடியேறிய ஆயிரம் வீட்டு யாதவர்கள் என்பது தெளிவாகின்றது. பிறப்புச் சடங்கு, இறப்புச்சடங்கு ஆகியவற்றிலும் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் காணப்பெறவில்லை என்பதும் ஈண்டு நினைவில் கொள்ளத்தக்கதாகும்.

ShriBalaSubiksham
Ramasubramanian